விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 9 ஷவ்வா 24 இதழ் 192
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-8-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம், தங்களது விற்பனை முகவர்களாக எம்மை நியமனம் செய்துள்ளது. உங்களுக்குத் தேவையான
சிப்போட், பிளைவூட் வகைகளுக்கும் கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, டொன்பிறேட், யாழ்ப்பாணம்
தொலைபேசி : 508

★ மட்டக்களப்பு அபிவிருத்தி சபை: தொடர்ந்து இழுபறி!

# ஐ.தே.க. உறுப்பினர்கள் இன்றி சபை கூடியது!

## 3 தீர்மானங்கள் நிறைவேறின

(நமது நிருபர் தமிழினியவன்)

ஆரம்பக் கூட்டம் முதல் தொடர்ச்சியாகப் பெரும் சர்ச்சைக்குள்ளாகி வந்த மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டம் நேற்றும் சர்ச்சைக்குள்ளானது. நேற்று நடைபெற்ற அபிவிருத்திசபைக் கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

### தொடர்ந்து இழுபறி

நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்திற்கு சபைத் தலைவர் திரு சம்பந்தமூர்த்தி தலைமை வகித்தார்

கடைசியாக நடைபெற்ற அபிவிருத்திசபைக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் ஐக்கியதேசியக்கட்சிக்குமிடையே இழுபறி ஏற்பட்டதும் கூட்டத்தை தலைவர் திரு சம்பந்தமூர்த்தி ஒத்திவைத்ததும், இதனைத் தொடர்ந்து கூட்டணி உறுப்பினர்கள் இல்லாத நிலையில் ஐக்கியதேசியக் கட்சி கூட்டத்தை நடத்தியதும் தெரிந்ததே

### கடந்த கூட்ட அறிக்கை

நேற்று அபிவிருத்திசபை கூடியதும், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சார்பில் திரு. தவராஜா, கடந்த கூட்ட அறிக்கையை வாசித்தார்.

''கடைசியாக நடைபெற்ற கூட்டத்தை, சபைத் தலைவர் திரு சம்பந்தமூர்த்தி 24-தி-திவரை ஒத்திவைத்தார்.'' என்று சென்ற கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதே நேரத்தில் கடைசியாக அபிவிருத்திசபைக்கூட்டத்தை கூட்டிய ஐ தே கட்சி தங்களது கூட்ட முடிவில், ''இக்கூட்டம் இம்மாதம் 28-ம் திகதி வரை ஒத்திவைக்கப்படுகிறது'' என்று அறிவித்திருந்தனர்.

நேற்றைய கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அபிவிருத்திசபைகளின் அவசரதேவைகளுக்காக உள்ளூராட்சி சபைகளின் நிதியிலிருந்து நிதி பயன்படுத்துவது; மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மரக்கூட்டுத்தாபன மரங்களை வெளியே கொண்டு செல்வதை தடை செய்வது; கடந்த சூறவளியினல்

[6-ம் பக்கம் பார்க்க]

நல்லூர் கோவிலில்.

## தாலிக்கொடி திருடினுர்; ஒரு வருட கடூழியம்!

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்றத்தின் போது, தாலிக்கொடி திருடியதாக குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

நல்லூர் கொடியேற்றத்தின் போது கொக்குவிலைச் சேர்ந்த இ. கனகம்மாவின் 15,000 ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியபோது சந்தேகநபரான கந்தசாமி சுப்பையா இளைஞர்களால் வளைத்துப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இவர் மீது குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில், எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத்தொடர்ந்து ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

இதற்கு முன் திருடப்பட்ட ஒருசோடி காப்பை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சாவகச்சேரி நீதிமன்றத்தில் எதிரி நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்ததால், அக்கால எல்லைக்குள் இக்குற்றத்தை எதிரி செய்துள்ளதால் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டார். [க]

இந்திரா கொலை முயற்சி:

## அதிமுக செயலாளர் மீதும் குற்றப் பத்திரிகை

சென்னை, ஆக. 24

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்ய முயன்றதாக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு பா உ சண்முகத்திற்கு எதிராக சென்னை நீதிமன்றத்தில் நேற்றுக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

திரு. சண்முகத்துடன் மற்றும் 7 பேருக்கு எதிராகவும் இக்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

திருமதி காந்திக்கு எதிராகச் சதி செய்ததாகவும் கொலை செய்ய முயற்சித்ததாகவும் இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தாம் நிரபராதி என்று திரு. சண்முகமும் மற்றும் 7 பேரும் தெரிவித்தனர். விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [இ]

## தீ விபத்து

[மட்டக்களப்பு]

காத்தான்குடியிலுள்ள கைத்தறி நெசவாலை நேற்று முன்தினமிரவு தீவிபத்துக்குள்ளானதில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம்ரூபாசேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

இராமேஸ்வரத்தில்

## 2 படகுகளுடன் ஒன்பது இலங்கையர் கைது

ரூபா 1லட்சம் கடத்தல் பொருட்களும் மீட்பு

சென்னை, ஆக. 24

இலங்கையின் இரண்டு இயந்திரப் படகுகளை ராமேஸ்வரத்தில் வைத்து இந்திய சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர். ஒன்பது இலங்கையர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியுள்ள கடத்தல் பொருட்களை சுங்கஅதிகாரிகள் கைப்பற்றினர்கள். [வெ]

திஸ்ஸமஹாரகமவில்

## சென்னைவாசி மரணம்; சடலத்தை கொண்டுசெல்ல தூதரகம் நடவடிக்கை

[கொழும்பு]

திஸ்ஸமஹாரகமவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த அசம்பாவித சம்பவத்தில், சென்னையைச் சேர்ந்த ஒருவர் மரணமானர்.

கதிர்காமத்துக்குச் சென்றுவிட்டு கொழும்பு திரும்பும் வழியில் திஸ்ஸமஹாரகமவில் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் நிகழ்ந்த அசம்பாவித சம்பவத்

[6-ம் பக்கம் பார்க்க]

## பத்திரிகைத் தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

பார்வை

## இழந்த இருவர் சாதனை

லண்டன், ஆக 24

பிரிட்டனைச் சேர்ந்த பார்வை இழந்த ஒருவர் நேற்று ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்

சீறியெழும் கடல் அலைகள் அவர்களது முயற்சியை மூன்று தடவைகள் தடுத்தபோதிலும் அவர்கள் மனம் தளராது இச்சாதனையை நிலைநாட்டினர்

(6-ம் பக்கம்பார்க்க)

## ''வெளிநாடுகளில் எமது வாலிபர்கள் கஷ்டப்பட்டு உழைக்கின்ருர்கள்''

பண்ணுகத்தில் 'அமிர்'

[சுழிபுரம்]

''எமது வாலிபர்கள் வெளிநாடுகளில் பல கஷ்டங்கள் மத்தியில் பணம் சம்பதிக்கின்ருர்கள். செய்ய முடியாத, செய்யத்தகாத வேலைகள் பலவற்றை எல்லாம் செய்கின்றனர். இங்கு சுகசீவியம் நடத்திய பலர் வெளிநாடுகளில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது பத்திரிகைகள் விற்கின்ருர்கள். பெரிய சாப்பாட்டு விடுதிகளில் சமையல் செய்து பணம் சம்பாதித்து பகலில் படிக்கின்ருர்கள். லண்டனில் பொறியியலாளர்களாகக் கடமையாற்றுவதாக இங்கு வரும்போது கூறிக்கொள்ளும் சிலர் அங்கு சவக்குழி வெட்டும் வேலைகளைச் செய்வதை நான் கண்டுகொண்டேன். எவ்வளவோ தொல்லைகளுக்கிடையே எமது வாலிபர்கள் பணத்தை உழைத்து வருகின்ருர்கள்.''

இவ்வாறு பண்ணுகம் கிராம அபிவிருத்திச்சங்கப் பொதுக் கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு அ.அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வ. ஆறுமுகம்

[6ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

சாருக்குரிய இதயபுகளி 3 இயசுடன் யாழ்ப்பாணம் நவீன சந்தை அருகில் தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும் சு. சிதம்பரநாதன், பண்ணாகம், சுழிபுரம். 0725

## தேவை

சாய்ந்த துப்பரவான எலுமிச்சம்பழம் சோதை தேவைமில்க்வைற், யாழ்ப்பாணம். 0726

## விற்பனைக்கு

சோண்டாவில் கிழக்கில் இரண்டு பரப்புக்காணித்துண்டொன்று விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: 16, கனகசபை அவெனியு, யாழ்ப்பாணம். 0721

கோப்பாய் தெற்கு பழம் வீதியில், நாவலர் பாடசாலையிலிருந்து 300 யாருக்கப்பால் 4 பரப்பு தென்னங்காணி. எஸ். இரத்தினசிங்கம், கோப்பாய். 0681

பிறவுண் ரோட்டில் ஒன்றே கால் பரப்பு வீட்டுறுப்பான காணி விற்பனைக்கு உண்டு 37/1 சிவகுருநாதர் வீதி, பிறவுண் ரோடு, யாழ்ப்பாணம். 0723

## வாடகைக்கு

மின்சாரம், குளியலறை சார்சாச் வசதிகளுடன் அடங்கிய மூன்று அறைகள் கொண்ட வீடு திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு அண்மையில் யாழ். பலாலி வீதிக்கருகாமையில் வாடகைக்கு உண்டு விளம்பர இல: 0718 கே/பா "ஈழநாடு" யாழ்ப்பாணம். 0718

த சோமசுந்தரம், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் 93/1 மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளைக்கான அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்.

ஆனைக்கோட்டை கூளாவடியைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணமெய்திய கருங்குளம் பொன்னம்பாபிள்ளை சுந்தரலிங்கம்பிள்ளையின் மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்.

திருமதி மங்கையர்க்கரசி சுந்தரலிங்கம்பிள்ளை, கூளாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய்.

மனுதாரர்

மரணச்சொத்து வியாபாரிக்கம் ரி/3618 எதிர்

(பராயமடையாதவர்) 1. செல்வி விசாகை சுந்தரலிங்கம் பிள்ளை, கூளாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய்

2. சேதுராமலிங்கம் பிள்ளை சண்முகசுந்தரம் இல 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆட்களும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4-ந்திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி ஒப்பம்

தா. குலஞானம், பதிவாளர்.

1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 13-ம் நாள் 0700

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று

காலஞ் சென்ற இரத்தினசபாபதி அருள்ஞானத்தின் மரணசாதனமில்லாச் சொத்து விடயமாக.

மயிலிட்டிச் சேர்ந்த இரத்தினசபாபதி கைம்பெண் ஞானபரமேஸ்வரி கிழக்கு ரோட்டு வல்வெட்டித்துறை

மனுதாரர்

[illegible] இலக்கம் 1119.T.

1. இரத்தினசபாபதி சிவஞானம்
2. இரத்தினசபாபதி தவஞானம்
3. இரத்தினசபாபதி குகஞானம்
4. பாலசுந்தரம் இராசேஸ்வரன்
5. பெண் மேசம்மா
6. இரத்தினசபாபதிகள் றபணியம்மா யாவரும் கிழக்கு ரோட்டு, வல்வெட்டித்துறை

எதிர்மனுதாரர்

மேலே இலக்கம் கொண்ட மரணச் சொத்தை நிருவகிப்பதற்கான வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனமற்ற சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆட்களும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்.

1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி பதிவாளர் 0720

## புதிய நிர்வாகிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் மகாசபைக் கூட்டம் ஆலய மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. வே. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு தி சதாசிவம், உபதலைவர்கள் திரு வே சு கருணாகரன், திரு இ தருமலிங்கம் பொருளாளர்: திரு சு தனிநாயகம். செயலாளர் திரு மா குமாரசாமி. நிர்வாகச் செயலாளர் திரு நாகநாதமூர்த்தி சமயப்பிரசாரச் செயலாளர் திரு. சு த இரவிகுமாரன் (ஈ

# "சைவசித்தாந்த கருத்துக்கள் எமது வாழ்க்கையுடன் இணைந்தவை"

[மாவிட்டபுரம்]

சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்புவதில் அந்தணர்கள்தான் முன்னணி வகிக்க வேண்டும். ஆனால் அவர்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பதால் இதில் ஈடுபட முடிவதில்லை. ஆகவே நாம் அந்தணர்களுக்கு வேண்டிய வசதிகள், வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து சைவ சித்தாந்தப் பணியில் அவர்களை முழுமையாக ஈடுபடச் செய்யவேண்டும். ஆலயங்களை மையமாக வைத்து அந்தணர்கள் மூலமாகச் சைவசித்தாந்தத்தைப் பரப்புவதே சிறந்த வழியாகும்."

இவ்வாறு செந் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, குப்பிளான் கற்கரை கற்பகவிநாயகர் ஆலய உற்சவத்தின்போது நடந்த சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. கா. நடேசபிள்ளை தலைமையில் நடந்த இச்சொற்பொழிவில் அவர் மேலும் கூறியதாவது:

"சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எமது வாழ்க்கையுடன் இணைந்தவை. எமது வாழ்வுக்கு வழிகாட்டியாகத் திகழும் சைவசித்தாந்தக் கருத்துக்களை நாம் பின்பற்றவேண்டியது இன்றியமையாததாகும். ஈழத்தில் நாவலர் தொடக்கம் பல அறிஞர்கள் சைவ சித்தாந்தத்தை வளர்க்கப் பாடுபட்டனர்.

"சிறுவர்களுக்கு இளம் வயதிலிருந்தே சைவ சித்தாந்த வகுப்புகளை நடத்தி, சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் புகுத்தவேண்டும். அந்தணர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். அவர்கள் மூலமாகவே சைவ சித்தாந்தம் வளர்க்கப்படமுடியும்." (ஈ)

## நாவலர் இல்லம் சாம்பியன்

[அரியாலை]

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாசாலையில் இல்லங்களுக்கிடையிலான அண்மையில் நடந்த விளையாட்டுப் போட்டியில் நாவலர் இல்லம் 238 புள்ளிகளைப்பெற்று சம்பியனாகியது. தனிநாயகம் இல்லம், விபுலானந்தர் இல்லம் ஆகியவை முறையே 234, 168 புள்ளிகளைப் பெற்றன.

## லெபனான் நிலைமை பற்றிய மாநாடு

பெய்ரூத், ஆக. 24

லெபனான் நிலைமை பற்றி அராப விசேஷ அரபு உச்சி மகாநாடொன்று நடத்தப்படவேண்டுமென்று லெபனான் அரசு அரபு நாடுகளைக் கேட்டுள்ளது. (லெ)

## புதிய கமிட்டி

(அரியாலை)

யாழ்ப்பாண வை. எம் சி. ஏ. ஸ்தாபனத்தாரின் வருடாந்தக் கூட்டத்தில் தலைவராக திரு. யே. எம். சபாரத்தினமும், உபதலைவர்களாக திருவாளர்கள் எல். ஆர். முத்தையா, சிவன் கதிர்காமர் ஆகியோர்களும், செயலாளராக திரு. எம். தம்பித்துரையும், பொருளாளராக திரு. எம். சி. பிரான்சிஸ்கம், ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ)

## மாதர் சங்க சேவைக்குபாராட்டு

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் மாதர் சங்கத்தால் நடாத்தப்படும் சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழாவில் சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினம் கலந்துகொண்டு மாதர் சங்கம் ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

மாதர் சங்கத் தலைவி திருமதி த. சோமசுந்தரம் தலைமையில் குமாரகுருபரன் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. ச. துரைராசா, உலாந்தி செல்வி எஸ். இராசரத்தினம் ஆகியோரும் பாராட்டுரை நிகழ்த்தினர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வேலுப்பிள்ளை தம்பிராசா, குப்பிளான், ஏழாலை.

வழ. இல. எம்.பி/ 3772 வழக்காளி

எதிராக

1. சோமசுந்தரம் சுப்பிரமணியமும்
2. நிக்கலஸ் முத்துவும், குப்பிளான் ஏழாலை.

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/3772 க் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1981-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7-ம் திகதி (07 - 09 - 1981) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதலீட்டுத் ரூபா 12,000/-ம் 18 - 8 - 1980 தொடக்கம் 8 - 1 - 1981 வரைக்கும் ரூபா 60060/- க்கு 18 வீதவட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 774/55

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி கல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இடைக்கும் [illegible] அரியாலையும் [illegible] நிலப. 48 குழி 14 ஆம் [illegible] நில பரப்பு 69 குழி 11/6 [illegible] நிலப்பரப்பு 48 [illegible] நில. பரப்பு 12-க் குழி 6 1/6 ம் [illegible] நில. பரப்பு 10 [illegible] நிலபரப்பும் [illegible] வடக்கு ரோட்டு [illegible] முடிப்புக்காரரின் ஆதனம் தெற்கு [illegible] இணைந்தில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புத்தும்.

(க சிவஸ்கந்தா)

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்.


நாகேந்திரவடம் வங்குக்கோட்டை

[மா-ஈ) 1 - 08 - 81

0722


CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.




● உலகப் புகழ் ரூபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

**மணிவாக்கு**

மொழியும் எண்ணமும் இணைபிரியாதவைகள். மொழியின்றி எண்ணமுடியாது; எண்ணுததை மொழிய முடியாது.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## 'நாமார்க்கும் குடியல்லோம்'

தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் சைவ மக்கள் பலர் இஸ்லாமிய மதத்தைத் தழுவிவருகின்றனரென்பது இந்தியப்பிரதமர் இந்திராகாந்திக்கே ஒரு சிறு நெருக்கடியை உண்டாக்குவதாகச் சொல்லப்படுகிறது.

பண்டைக்கால இந்திய சரித்திரம் மீண்டும் நடிக்கப்படுகிறதென்ற கேள்வியும், நால்வர் பெருமக்கள் மீண்டும் திரு அவதாரம் செய்யுங்காலம் கிட்டிவிட்டதா வென்றும் கேட்கப்படுகிறது.

வைதிகத்தைக் கையாளும் சைவர்கள், அதற்கு முரணான பல இந்துக்களை சமய ரீதியில் ஒதுக்கிவந்தது பண்டைய சரித்திரம்

சுதந்திர இந்தியாவை உருவாக்கிய மகாத்மா காந்தியும் நேருவும், மதசார்பற்ற அரசையே இந்தியாவுக்குத் தந்ததென நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்.

மழை விட்டும் தூவானம் போகாததுபோல், வைதிக சைவர்கள சமயத்தின் விசாலமான பெருமையை மறைத்து, சாதாரண ஏழை மக்களைக் கிராமப்புறங்களில் ஒடுக்கிவருகின்றனர் போலும்.

இந்து சமயக் கோட்பாட்டுக்கு இது முற்றிலும் மாறு. எல்லாவிதமான நிலையில் வாழும் சைவர்களுக்கும் சமயத்தில் இடமுண்டு.

யாதொரு தெய்வங்
கொண்டீர் அத்தெய்வ
மாகி
ஆங்கே மாதொரு பாக
னூர்தாம் வருவார்.

எந்தொரு சமயத்தவரும் தமது சமயக் கடவுளை வழிபடும்போது அவ்வழிபாட்டைக் கடவுள் ஏற்று அருள் செய்வாரென்று சொல்லுவது சைவசமயம் மாத்திரமே.

மோட்சமடைவதற்குச் சாதனமாகச் சமய அநுட்டானத்தைப் படிப்படியாக நிரைப்படுத்தியுள்ளது சைவ சமயம் மாத்திரமேயாகும்.

எல்லாவிதமான தீவினைகளையும் விலக்குவது சைவ சமயம் மாத்திரமேயாகும். ஏனைய தீவினைகளோடு கள்ளுண்ணல், புலாலுண்ணல், கொலையாகிய மூன்றையும் விலக்குவது சைவசமயமே.

புறச் சமயத்தை வலிந்து இழுக்காதது சைவசமயம் மாத்திரமேயாகும். ஏனைய சமயத்தவர்களைத் தங்கள் சமயத்துக்கு இழுப்பதே தமது பெரிய முயற்சியாக் கொள்வார்கள்.

எங்கள் நாட்டில் இதனைப் போராடி சைவசமயத்தை நிலைநாட்டியவர் ஆறுமுக நாவலர். மதமாற்றம் இங்கும் முற்றாகச் செத்துவிடவில்லை. பொன்னையும் பெண்ணையும் இன்னும் பல வசதிகளையும் தூண்டுதல்களாக வழங்கி மதமாற்றம் செய்தல் சட்டமூலம் தடைபண்ணவேண்டும். மனித அடிப்படை உரிமைக்கு மாறுன செயல் இது.

சைவர்களைப் பொறுத்தவரையில் சாதித்திமிர் வைதிகப் போர்வையில் மற்றையோரை இம்சித்தல், சமூகப்பாகுபாடு போன்ற இயல்புகளை விரட்டியடிப்பதில் சைவசமூகம் என்றும் விழிப்பாக இருக்கவேண்டும்.

## பசுப் பாதுகாப்பு

சைவ சித்தாந்தத்தின் மூன்று அடிப்படை அம்சங்கள், பதி, பசு, பாசம் என்பதை ஒவ்வொரு சைவனும் அறிந்திருக்கிறன்.

இதில் பசு என்பது ஆன்மாவைக் குறிக்கின்றது. ஆன்மா என்ற பசுவுக்கும், நாங்கள் வீட்டின் பெருஞ் செல்வமெனக்கருதி வளர்க்கும் பசுவுக்கும் ஒற்றுமைக் கருத்துக்கள் பல.

தனக்கெனவாழாப் பிறர்க்குபகாரஞ்செய்யும் மிருதுவான மிருகங்களில் பசு முதலிடம் பெறுகின்றது

இந்துக்களின் வாழ்க்கையில் பசு உன்னத இடத்தை வகிக்கின்றது. இக்கனக்கருத்திற்கொண்டே பாகிஸ்தானின் மொகமட் அலிஜின்னு மகாத்மா காந்தியையும், பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களையும் ஒருசிறு முரண்பாட்டுக்குள் அமர்த்தி, இந்தியப் பிரிவினை தவிர்க்கமுடியாதென்று நிரூபித்தார்.

இந்துக்கள் பசுவைத் தெய்வமென வணங்குகின்றனர். இந்தியாவில் மாட்டுப் பொங்கல்விழாவில் பசுவுக்கு பூஜை திருவிழா பொங்கல் முதலியன இதனை எடுத்துக்காட்டும். ஆனால் முஸ்லிம்களோ அதனை கசாப்புக்காரனுக்குவிற்று அதன் இறைச்சியில் வாழ்கின்றேம்.

இவ்வித அடிப்படை முரண்பாட்டில் கொள்கையைக் கொண்ட நாம் எவ்வாறு உடன் வாழலாம்?

எங்கள் நாட்டிலும் இறைச்சித் தட்டுப்பட்டால் ஒரு போதுமில்லாத ஒரு கொடிய வழக்கம் ஏற்பட்டுள்ளது.

காலமாற்றத்தில் நாமெங்கள் பழைய பெருமை வாய்ந்த பழக்கங்களைக் கைவிட்டு மதக்கோட்பாட்டுக்கெதிரான வழக்கங்களை மறைமுகமாகக் கோவில்களிலேயே அனுமதிக்கத் தொடங்கிவிட்டோம்.

இந்நாட்டில் இந்துக்களுக்குரிய தனிப் பண்பு மாட்டிறைச்சியை உணவுக்கு அனுமதிக்காமை ஆகும்.

ஆனல் பொருள் ஆசை பிடித்த கோவில் அதிகாரிகள் ஆடுகள், கோழிகள், பசுக்கள் போன்றவற்றைக் காணிக்கையாகப் பெற்றுக் கசாப்புக் கடைக்காரருக்கு விற்றுவரும் வழக்கம் சில இடங்களில் இடம்பெறுகின்றது.

ஆலயங்களில் உயிர்ப் பலியை அடியோடு ஒழித்துக்கட்ட உறுதிபூண்ட மக்கள், இன்று ஆலயங்களுக்கு உயிரினங்களைக் காணிக்கையாகக் கொடுப்பதைக் கைவிட முன்வர வேண்டும்.

இந்த அவசிய அரும்பணியில் புங்குடுதீவு பெருங்காடு முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபையினர் முதன் முதலாக இப்பணியில் வழிகாட்டியிருப்பது மெச்சத்தக்கது.

இவ்வித கொடிய பழக்கம் கோவிலில் இடம் பெருமல் சட்டம்கொண்டுவருவது கடினமல்ல. ஆனல் இந்துக்களாகிய இந்நாட்டின் பெருமக்கள் சமூக ரீதியில் இதனைத் தாங்களாகவே ஒழித்துவிடுவது சாலச் சிறந்ததாகும்.

பலசமய, சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் பல்லாண்டுகளாக ஈடுபட்டு வந்த சைவப்பெரியார் மு. மயில்வாகனம், பசுப் பாதுகாப்புச்சபை செயலாளராக இந்தத் தள்ளாத வயதிலும் தொண்டுசெய்ய முன்வந்திருக்கிறர். அவருக்கு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

இந்துக்களின் மனச்சாட்சிக்கு ஒரு அறைகூவல்

# சமூகக் கொடுமைகளுக்கு மதமாற்றம் பரிகாரமாகுமா?

## இந்தியாவில்தலைதூக்கியுள்ள ஒரு பிரச்னை

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் ஹரிஜனங்கள் கோஷ்டி கோஷ்டியாக மதம் மாற ஆரம்பித்திருப்பது இந்திய அரசுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

இந்திய அரசைவிட இந்து சமூகத்துக்கு இது ஒரு பெரும் சோதனை என்றே கருதப்படுகின்றது.

பல நூற்றுண்டுகளாக இந்துக்களாகவே இருந்துவந்த இந்தச் சமூகத்தவர்கள் திடீரென முஸ்லிம்களாக மதம்மாற ஆரம்பித்திருக்கிறர்கள். ஒருவர் இருவர் அல்ல, ஒரு குடும்பம் இரு குடும்பமும் அல்ல; ஒரு சமூகமே கிராமம் கிராமமாக மதம்மாற ஆரம்பித்திருக்கிறதாம்.

இந்தியாவில் சுமார் 6 கோடி முஸ்லிம்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. பெரும்பான்மை மதத்தவர்களான இந்தியர்கள் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளையும் சார்ந்தவர்கள். இவர்களில் கணிசமான தொகையினர் ஹரிஜனங்கள் என காந்திஜியால் அழைக்கப்பட்ட பின் தங்கிய தாழ்த்தப்பட்ட பழங்குடிகள்.

இப்போது ஏற்பட்டுள்ள மதம்மாறும் போக்கு நீடிக்குமானல் இந்திய முஸ்லிம்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிவிரைவிலேயே பெருகிவிடுவது ஒருபுறமிருக்க, இந்துக்களே பாரம்பரியமாக பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பகுதிகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகிவிடக்கூடும். முஸ்லிம்களே இல்லாத பகுதிகளிலும்கூட திடீர் முஸ்லிம் சமூகங்கள் ஏற்பட்டுவிடலாம். இதனல் இந்தியாவின் பாதுகாப்புக்கும்கூட ஆபத்தாக முடியும் என இந்திய அரசு அஞ்ச இடமுண்டு.

இந்துக்களாகிய ஹரிஜனர்கள் பெரும் எண்ணிக்கையில் மதம்மாறும் போக்கு இப்பொழுது தமிழ் நாட்டிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில் அண்மையில் 32 பேர் மதம்மாறினார்கள். இன்னும் பலபேர் மதம்மாறுவதற்கு ஆயத்தங்கள் செய்துவருகிறர்கள். மதம் மாறவிருந்த 28 பேர் தமது நோக்கத்தை ஒத்திவைத்திருக்கிறர்கள். வேறு சில கிராமங்களிலும் மதம்மாறுதல் இடம் பெற்றுள்ளதாம்.

தமிழ்நாட்டில் உருவாகியுள்ள இந்த நிலைமை ஏனைய மாநிலங்களுக்கும் இலகுவாகப் பரவிவிடக்கூடும் என மத்திய அரசு அஞ்சுகின்றது.

தமிழ்நாட்டில் அ. தி. மு. கழக மாநில அரசின் போக்குதான் ஹரிஜனர்களின் இந்த மத மாற்றத்துக்குக் காரணம் என்று மத்திய அமைச்சர் ஒருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனல் இது சரியான காரணம் எனக் கருத இடமில்லை.

### சமூகக் கொடுமை

இந்தியாவில் சாதியின் பேரால் சமூகக் கொடுமைகள் இன்று நேற்றல்ல பலயுகங்களாக நடைபெற்றுவருகின்றன. இந்தக் கொடுமைகளினின்றும் விடுபடுவதற்காக அவர்கள் முனைப்பாக செயல்படமுடியாத சூழ்நிலைகளிலேயே வாழ்ந்து வருகிறர்கள்.

என்றுலும் சாதிக்கொடுமைகளை அகற்றவும் தாழ்த்தப்பட்டவர்களை கைதூக்கிவிடவும் தமிழ்ப்பெரியார்களும், சமயத் தலைவர்களும் காலத்துக்குக்காலம் முயற்சிகளில் ஈடுபட்டே வந்திருக்கிறர்கள்.

உயர்சாதி இந்துக்களின் கொடுமைகளினின்றும்பின் தங்கிய சமூகங்களைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசியல் அமைப்பிலேயே வழிசெய்யப் பட்டுள்ளது என்றுலும் கொடுமைகள் குறைந்துவிடவில்லை.

இம்மக்களின் துயர் துடைப்பதற்கென மகாத்மா காந்திஜியே முன்னின்று பல முயற்சிகளை செய்தார். தாழ்த்தப்பட்ட மக்களை அவர் ஹரிஜனங்கள் என்று பெயரிட்டு அழைத்தார். ஆனல் அந்தப் பெயர் அம்மக்களின் நிலையை உயர்த்திவிடவில்லை.

### அம்பேத்கார் விருப்பம்

இந்தியாவிலுள்ள தாழ்த்தப் பட்டோரின் பெருந்தலைவராக விளங்கிய டாக்டர் அம்பேத்கார் இம்மக்களின் துன்பம் பொறுக்கமாட்டாமல் தம்மைப் பின்பற்றும் மக்கள் அனைவரையும் பௌத்தமதத்தில் சேர்த்துவிடலாமா என்று யோசித்தாராம். இவர் தமது கருத்துப்பற்றி ஈ. வே. ராவிடம் பிரஸ்தாபித்தபோது, மதமாற்றம் தீண்டாமைக்கு ஒரு பரிகாரமாகிவிட மாட்டாது என பெரியார் கூறியதாக அண்மையில் தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்திருக்கிறர்.

விசேஷ நிருபர்

### வேறு பின்னணி

தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்கிருந்துவரும் பாதுகாப்பு இன்மையினுலும் சமூகக்கொடுமைகளினுலுமே மதம் மாறுவதாகக் கூறப்பட்டபோதிலும் இதற்கு வேறு பின்னணி இருப்பதாக இப்பொழுது கூறப்படுகின்றது.

மதமாற்றத்துக்காக வெளிநாட்டிலிருந்து பணம் வருவதாக இப்பொழுது கூறப்படுகின்றது. வெளிநாட்டுப்பணம் இந்த மதமாற்றத்துக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாக தமிழ்நாடுமுதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனே அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கிறர்.

மதமாற்றம் விருப்பத்தின் பேரில் நடைபெறலாம். ஆனல் பணத்தையும் பொருளையும் காட்டி ஏழை எளிய மக்களை மதமாற்றுவது வரவேற்கக் கூடியதல்லவென்ற கருத்தே இப்பொழுது மேலோங்கி நிற்கின்றது.

இந்த நிலைமை குறித்து ஆராய 21 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று சமீபத்தில் தமிழ் நாட்டுக்கு வந்துசென்றது.

அதே சமயம் இந்து சமயத் தலைவர்கள் மத்தியில் இந்த மதமாற்றப் போக்கு ஒரு விழிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ஹரிசனர்களுக்கு இழைக்கப்பட்டுவந்துள்ள கொடுமைகளை ஒழிப்பதற்கு இவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளத்தொடங்கியிருக்கிறர்கள். ஹரிசனங்களின் நிலைமை குறித்து இந்து மதத் தலைவர்கள் பாராமுகமாகவும் அக்கறைகொள்ளாமலும் இருந்துவந்ததே இந்த நிலைமைக்குக் காரணம் என சிலர் கருதுகிறர்கள்.

இந்துக்களின் திடீர் மத மாற்றத்தைத் தடுக்கும் விதத்தில் சட்டங்களைக்கொண்டுவர வேண்டுமென குன்றக்குடி அடிகளார் கோரிக்கை விடுத்திருக்கிறர். ஹரிசனர்க் காலனிகளுக்கு இந்து சமயத் தலைவர்கள் சென்று அவர்களின் குறைகளைக் களையவும் கொடுமைகளைப்போக்கவும் முயலவேண்டும் என இனனெருவர் சுவாமியார் கூறியுள்ளார்.

குருவாயூரில் தங்கியிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் ஹரிசனத் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்னைகள்பற்றி ஆராய்ந்திருக்கிறர். ஹரிசனர்களின் மேம்பாட்டுக்கென ஒரு விடுதியை அமைக்கவும் அவர் முடிவுசெய்துள்ளார்.

தமிழ்நாட்டில் சில வாரங்களுக்குமுன் ஹரிசனர்களின் குடிசைகளை உயர்சாதிக்காரர்கள் எரித்துக் கொடுமைப்படுத்தியதினுலும் கோயாம்புத்தூரில் ஹரிசன இளைஞர்கள் சிலர் தென்னைமரத்தில்கட்டிவைத்து அடிக்கப்பட்டதனுலும் மனம் உடைந்துபோன ஹரிசனர்கள் இக்கிராமங்களில் மதம்மாற முயற்சி செய்ததாகக் கூறப்பட்டது.

### சில மாற்றங்கள்


இந்த மதமாற்றத்தினுல் உயர் சாதி இந்துக்களின் மத்தியில் சற்று கனிவு பிறந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பல கிராமங்களில் இப்போது திருவிழாக் காலங்களில் ஹரிசனர்களுக்கு கோயில்களில் போதிய இடம் கொடுக்க ஆரம்பித்திருக்கிறர்கள். ஆதி திராவிட காலனிகளுக்கு வீதி உலா செல்லாமலிருந்த சுவாமிகள் எல்லாம் இப்பொழுது அந்தக் காலனிக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. பல்வேறு கோயில்களிலும் சமபந்தி போசனங்களும், கூட்டு வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

சில கிராமங்களில் பொதுக் கிணறுகளில் ஹரிசனர்களும் தண்ணீர் அள்ளுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

உயர் சாதிக்காரர்களின் இம் மனமாற்றத்தினுல் ஏற்கனவே மதம் மாறிய சிலர் மீண்டும் இந்துமதத்துக்கே திரும்பியிருப்பதாகவும் கூறப்படுகின்றது மதுரையில் இந்திய சுதந்திரதினத்தன்று 300 கோயில்களில் ஹரிசனர்களுக்குச் சமபந்தி போசனம் அளிக்கப்பட்டது. உயர் சாதி இந்துக்களுடன் பெரும் அரசியல, சமூகத் தலைவர்களும் கலந்து கொண்டனர். மதுரை மீனுட்சியம்மன் ஆலயத்தில் நடந்த சமபந்தி போசனத்தில் 6 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.

[6ம் பக்கம் பார்க்க]



இன்று நல்லூர்க் கந்தன் 21-ம் திருவிழா

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியவ் பாழ்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர் நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னே வினை யேற்கென் குறித்தனையே

—கந்தர் அலங்காரம்.

"லிபிய விமானங்கள் சுடப்பட்டதற்கு

# கடாபி பொறுப்பானால் மரணதண்டனை விதிக்க வேண்டும்"

## எகிப்திய ஜனாதிபதி சதாத் கூறுகிறார்

கெய்ரோ, ஆக. 24

"லிபியாவின் இரண்டு விமானங்களை அண்மையில் அமெரிக்கா சுட்டு வீழ்த்தியதற்கு லிபியா ஜனாதிபதி கேர்ணல் கடாபி காரணமாக இருந்தால் அவருக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும்."

மேற்கண்டவாறு எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத் வாராந்தப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தவினார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"உலகம் முழுவதும் யுத்தத்தை ஏற்படுத்தி தன்னைப் பிரபல்யமான ஒரு தலைவராக்குவதற்கு கேர்ணல் கடாபி முயன்றுவருகிறார்.

"லிபிய விமானங்கள் அமெரிக்காவினால் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு கேர்ணல் கடாபி பொறுப்பாக இருந்தால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படவேண்டும்.

"லிபிய மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கேர்ணல் கடாபி செயற்பட்டு வருகின்றார்" என்றார். (வெ)

## 'மினிபஸ்' சாரதிக்கு வ.போ.ச. தலைவர் புத்திமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்துநிற்கும் பிரயாணிகளை அழைத்துச் சென்ற மினிபஸ் சாரதி ஒருவரை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பாதுகாப்பு உத்தியோகத்தர் துரத்திப் பிடித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்தின் முன்னிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

தனியார் பஸ் சாரதிகளும் கண்டக்டர்களும் யாழ். பஸ் நிலையத்திற்கு வந்து பிரயாணிகளை அழைத்துச் செல்வதாக கிடைத்த புகார்களைத் தொடர்ந்து வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர், நேரடியாகக் கண்காணிப்பதற்கு யாழ் பஸ்நிலையம் சென்றிருந்தார். அச்சமயம் மினிபஸ் ஒன்றை பஸ்நிலையத்திற்கு அருகில் நிறுத்திவிட்டு சாரதி கியூவில் நின்ற பிரயாணிகளை அழைத்துச்சென்றார். மினிபஸ் சாரதி, வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவரைக் கண்டதும் ஓட்டம்பிடித்தார்: அங்கு நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் அவரைத் துரத்திப் பிடித்தார். பஸ்நிலைய காரியாலயத்திற்கு மினிபஸ் சாரதி கொண்டுவரப்பட்டார். தலைவர் அச்சாரதிக்கு புத்திமதி கூறி அனுப்பிவைத்தார். (ஸ)

"ஈரானில்

## கொமெய்னியை 20 வீத மக்களே ஆதரிக்கிறார்கள்"

### பானிசத்தார் கூறுகிறார்

பாரிஸ், ஆக. 24

"அயத்தொல்லா கொமெய்னியை இருபது வீதமான ஈரானிய மக்களே ஆதரிக்கின்றார்கள்."

மேற்கண்டவாறு தற்போது பிரான்ஸில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ள முன்னாள் ஈரான் ஜனாதிபதி பானிசத்தார் அமெரிக்கத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"உளவு பார்க்கும் வேலைகளில் ஈரானிய மக்களை அயத்தொல்லா கொமெய்னி ஈடுபடுத்திவருவதால் அவரின் ஆட்சியைப் பெரும்பான்மை மக்கள் வெறுக்கிறார்கள்" என்றார்.

அதேவேளை இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராகச் சதிப் புரட்சியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஈரானில் இடதுசாரிக் குழுவைச் சேர்ந்த 23 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. (வெ)

## அமெரிக்க சோவியத் உறவு

வாஷிங்டன், ஆக. 24

"அமெரிக்க-சோவியத் உறவு குறித்து சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தை நடாத்த அமெரிக்கா தயாராக உள்ளது."

மேற்கண்டவாறு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு அலெக்ஸாண்டர் ஹெய்க் வாஷிங்டனில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். (வெ)

சாரணர் இயக்கம்

## சிறுவயதில் சமூகசேவை செய்ய உதவுகிறது

(பச்சிலைப்பள்ளி)

"மாணவர்கள் சிறுவயதிலேயே சமூகத்திற்கு உதவி செய்யப் பழகிக்கொள்வதற்கு சாரணர் இயக்கம் துணைபுரிகின்றது" என்று பருத்தித்துறை சாரணர் மாவட்ட உதவி ஆணையாளர் திரு. கோ. செல்வநாயகம் கூறினார்.

புதிதாக உருவாக்கப்பட்ட பருத்தித்துறை சாரணர் மாவட்ட நிர்வாகக் குழுவினர் மத்தியிலே அவர் உரையாற்றினார். இவ்வைபவம் வல்வை சிதம்பராக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

புதிய சாரணர் மாவட்டத்தில் கோப்பாய் தொகுதி, உடுப்பிட்டித்தொகுதி, பருத்தித்துறைத் தொகுதி ஆகியவற்றிலுள்ள பாடசாலைகளின் சாரணர் இயக்கங்கள் அங்கம் பெறுகின்றன. இப்புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டதினால் இம்மூன்று தொகுதிகளிலுமுள்ள பாடசாலைகளிலேயும் சாரணர் இயக்கம் வளர்ச்சியடையக்கூடியதாக இருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் சமூகத்திற்காக உழைப்பவர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களை சாரணர் இயக்கம் உருவாக்கித்தரக்கூடியதாக இருக்கும். [ஸ]

## கடதாசி இறக்குமதிமீது தடை விதிக்கவும்

### கூட்டுத்தாபனத் தலைவர் கோரிக்கை

[கொழும்பு]

தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் போதியளவு கடதாசி கையிருப்பில் இருப்பதால் கடதாசி இறக்குமதிமீது தடை விதிக்கவேண்டுமென்று இக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு எட்வேட் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

நாட்டில் இப்போது கடதாசிப் பாவனை குறைந்துள்ளதால் போதியளவு கடதாசி கையிருப்பிலிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஐந்து 5 வீத சலுகை அடிப்படையில் கடதாசி இறக்குமதி செய்வதற்கு நான்கு நிறுவனங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கியிருந்ததாகவும் ஆனால் தற்போது இச்சலுகையைப் பயன்படுத்தி 25க்கு மேற்பட்ட நிறுவனங்கள் கடதாசியை இறக்குமதி செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். [வெ]

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 9ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(25 - 8 - 81)

மேடம்: இதயத்தில் எரிமலை குமுறும் உள்வீட்டிலேயே உபத்திரங்கள் அதிகரிக்கும். குழந்தைகளொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம். ஆணைப் போக்கில் மற்றவர்களுடைய வெறுப்பை சம்பாதிக்க நேரிடலாம்.

இடபம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இடமுண்டு.

மிதுனம்: இதயக்கமலம் இன்பத்தில் மலரும், இல்லத்தில் பிணைப்புகள் இருக்கும். கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சுற்றதாரும் பயனும் கிடைக்கும்.

கடகம்: உறவாடிக் கெடுப்பதற்கு பலைவாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். பிரயாணத்திற்போது பொருள் நழுவக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

சிங்கம்: பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாறலின் கலை தாக்கும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். கலைந்திரவழியால் மகிழ்ச்சியுண்டு.

கன்னி: நித்திரையில் சூழ்நிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல் நிலை நிதி கவலையைத் தரவாம். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும் இலர் கடன்படவும் நேரிடலாம்.

துலாம்: புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதால் முன்னிற்கும் செய்வருபத்திக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: தொழில்துறையில் நல்ல திருப்பம் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமுண்டு.

தனு: புதுமையான சம்பவங்கள் நடைபெறும். இலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மகரம்: வெளியிடத்துப் பணம் வேதனைதரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று பெரியோர்களை பகைத்துக் கொள்ளாது பொறுமையை பேணிநடக்கவும்.

கும்பம்: மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் கிளையும். இளைய சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம். அபாயமான காரியங்களைத் தவிர்க்கவும்.

மீனம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணம் செலவாகும். அரசியல் வாதிகளுக்கு அதிஷ்டதினம்.

சோதிடவாரிதி
திருமலை
அ. வேலுப்பிள்ளை

## இளம் பெண் தற்கொலை

[மாவிட்டபுரம்]

பெற்றோருக்குத்தெரியாது கோவிலுக்கு வழிபாட்டுக்குச் சென்று திரும்பிய 14 வயது இளம் யுவதியை பெற்றோர் கண்டித்ததால் மனமுடைந்த அந்த யுவதி தற்கொலை செய்து கொண்டார்.

மயிலிட்டியைசேர்ந்த இராசமித்திரா என்னும் யுவதியே இம்முடிவுக்குள்ளானவராவார்.

காலமானவரின் சகோதரிகள் கோவிலுக்கு செல்ல ஆயத்தமான போது, காலமானவர் தாமும் வரப்போவதாக அடம்பிடித்ததாகவும். இதனையடுத்து அவர்கள் கோவிலுக்கு போகாமல் நின்றுவிடவே எவருக்கும் தெரியாமல் இவர் மட்டும் கோவிலுக்கு சென்றுவிட்டு பின்னர் வீட்டுக்கு திரும்பி வந்ததாகவும் அப்போது தாயார் இவரை கண்டித்ததாகவும் அதனால் மனமுடைந்து நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தி தற்கொலை என தீர்ப்பு வழங்கினார்.

மூலிகை மருந்துகள்:

# விலைப்பட்டியல் வராததால் விற்பனை நடைபெறவில்லை

## மருத்துவர்கள் சம்மேளனக் கூட்டத்தில் கசப்பான தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

"நோயாளருக்கு வேண்டிய அநேக மூலிகை மருந்துகளும் தயாரிக்கப்பட்ட மருந்துகளும் கையிருப்பிலிருந்தும்கொழும்பு தலைமையகத்திலிருந்து விலைப்பட்டியல் வராத காரணத்தால் விற்கமுடியாத நிலையில் இருக்கிறது

இத்தகவலை வட இலங்கை சுதேச வைத்திய சபை செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி தெரிவித்தார். வடஇலங்கை சித்தஆயுர்வேத மருத்துவர்கள் சம்மேளனக் கலந்துரையாடலின் போது அவர் பல தகவல்களை தெரிவித்தார்.

மருந்து விற்பனை திணைக்கள அதிகாரி லீவில் செல்லும் நாட்களில் அது மூடப்படுவதுடன் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் உத்தியோக விடுமுறை வழங்கப்படுகிறது. இம்முறை உடனடியாக நீக்கப்படவேண்டும்.

தராசு இல்லை

"விலைப்பட்டியலில் விலை குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளை நிறுத்து விற்பதற்கு தராசுகள் இல்லை மெட்ரிக் முறைக்கு மாற்றுவதற்கு 80ம் ஆண்டு கொண்டு செல்லப்பட்ட தராசுகள் மீண்டும் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்படவில்லை. அவர் மேலும் தெரிவித்தாவது: "காண்டாமிருகக் கொம்பு, குங்குமப் பூ, கஸ்தூரி, ரசம், கற்பூரம் போன்ற சித்த வைத்தியத்துக்கு முக்கியமான மூலப் பொருள்கள் தேவையென பல தடவைகள் கோரப்பட்டும் இன்று வரை தலைமையகத்திலிருந்து அனுப்பப்படவில்லை.

"மருந்துகளின் விலை திடீர் திடீர் என அதிகரிக்கப்படுகிறது. குறிப்பாக "பீனிசமூர்த்த தைலம்" 25 ரூபாவிலிருந்து 122 ரூபா 60 சதமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக 100க்கு 300 வீதம் அதிகரித்துள்ளது.

"விலைப்பட்டியல் அனுப்பாத காரணத்தால் ஒருவருஷத்துக்கு முன்பு அனுப்பப்பட்ட அதிமதுரம் விற்பனை செய்யப்படாது பழுதடைந்து விட்டது.

"1979ல் விற்பனை அதிகாரி தனது பதவியை ராஜினாமா செய்தும் இன்று வரை இது வெற்றிடமாகவே உள்ளது. இதேபோல 1976ல் இடமாற்றம் பெற்றுச்சென்ற காசாளர் இடமும் காலியாகவே உள்ளது.

வாகனம் இல்லை

"கூட்டுத்தாபனத்துக்கு மருந்து எடுத்துச் செல்ல சென்ற வாகனமும் சாரதியும், இன்னும் திரும்பவும் வந்து சேரவில்லை.

இச்சம்பவங்களைக் கேட்டுக் கொண்டிருந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ் நடராசா தம்மால் இயன்றளவுக்கு பரிகாரம் காணமுயலுவதாக உறுதியளித்தார். (மா)

**வெலிங்டன்** (காங்கேசந்துறை)
தினசரி 3-30, 6-30
**திசைமாறிய பறவைகள்**

**ராகம்ஸ்** (கல்லூரம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
**தூக்கு தூக்கி**

6-வது வெற்றி வாரம்
**ஹரன்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
**நூல் வேலி**
(கலர்)


## மயிலியற்புலத்தில் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி விசேட அபிஷேகமும், பூசையும் அன்னதானமும் இடம்பெறவுள்ளது. இரவு முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதிஉலா வருவார்.

## பயிற்சி

(மூதூர்)

இலங்கை நூலக சங்கத்தினால் வடபகுதி நூலகங்களின் மாணவர்களுக்கு நடாத்தப்பட்டுவரும் முதலாவது நூலக வியல்பயிற்சி நெறிக்கான இரண்டாவது செய்முறைப் பயிற்சி கடந்த 18ம் திகதி ஆரம்பமாகியுள்ளது.


**வெலிங்டன்**
தினசரி 4 காட்சி
**வெகுளிப் பெண்**

**[illegible]** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா
**நீதிக்கு தலைவணங்கு**

**சாந்தி** (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — ராதாசலூஜா
**இதயக்கனி**
—புத்தம் புதிய பிரதி—
Await "THE BRAVE BUNCH" Adults

**மனோகரா** (காங்கேசன்துறை) தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-ராம்லி-முருகன்
**ஒரு கை ஓசை**

வெற்றிகரமான 6-வது வாரம்
**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர். ★ லதா
**பல்லாண்டு வாழ்க**
(சினிமா கலர்)

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா
★ ராதாசலூஜா ★ தேங்காய்
★ நம்பியார் நடித்த
**நீலக்கடலின் ஓரத்திலே**
(சினிமாஸ்கோப் கலர்)

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
**சுவர் இல்லாத சித்திரங்கள்**

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — துளசிராம்
**சங்கராபரணம்** (கலர்)


# ஈழத்து இலக்கியம்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது

## 'சோ' கூறுகிறார்!

கடந்தவார இறுதியில் யாழ். நகர் நெல்லியடிக்கு வந்து திரும்பிய தமிழகப் பத்திரிகை ஆசிரியரும், நடிகரும் சட்டஆலோசகருமான "சோ" ராமசாமிடம் திரு. ஸ்ரீ பரமானந்தா ஆசிரமத்தில் நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள் இங்கு வெளியாகிறது. தொகுத்தளிப்பவர் நாவலர் புலவர் நிருபர் திரு. ஏ. என். எஸ். இருசெல்வம்.

கேள்வி: தமிழிலக்கியங்களில் தற்காலத்தில் ஈழத்து சமகாலப் பங்களிப்பு பற்றித் தங்களின் கருத்தென்ன?

சோ: பொதுவாக தமிழிலக்கியங்களில் சரியான அறிவு எனக்கில்லை. அதுவும் ஈழத்து இலக்கியங்கள் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. தெரியாத விடயத்தைப்பற்றிக் கூற முடியாதுதானே.

கே: ஈழத்து சஞ்சிகைகள் வளர்ச்சிக்கு தமிழக ஊக்குவிப்பு இல்லை என்று கூறப்படுகிறதே அதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

சோ: நீங்கள் எதைக் கேட்கின்றீர்கள் அதாவது தமிழகத்தில் ஈழத்து சஞ்சிகைகள் வரவேற்கப்படுவதில்லை என்பது பற்றித்தானே.

நிருபர்: ஆம்

### பத்திரிகைத் தொழில் என்றால்......

சோ: பத்திரிகைத்தொழில் என்பது. இலக்கியப்பணியுடன் வியாபாரமுமாகும் வியாபாரத்திற்கு விளம்பரம் முக்கியம் எனவே இச் சஞ்சிகைகளுக்கு தமிழகத்தில் விளம்பரம் செய்யப்படவேண்டும். தமிழகத்தைப்பற்றிய செய்திகள், கருத்துகள் அப்பத்திரிகைகளில் எவ்வளவு தூரம் இடம் பெறுகின்றதோ அவ்வளவுதூரம் அங்கு அப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு அளிக்கப்படும். ஈழத்து எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும்.

ஈழத்துச் சஞ்சிகைகள் பற்றிய விளம்பரங்கள் தமிழகத்திலும் மேற்கொள்ளப்படவேண்டும். அப்போதுதான் ஈழத்துச் சஞ்சிகைகள் வளர்ச்சிக்கு தமிழகத்திலும் ஊக்குவிப்பு அளிக்கப்படும். ஈழத்து எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் இதில் கவனமெடுக்கவேண்டும்."

கே: ஈழத்துதமிழ் மக்களின் கலாச்சாரம் பண்பாடு என்பனபற்றித் தங்கள் அபிப்பிராயம்?

சோ: ஈழத்து தமிழ் மக்களின் கலாச்சாரம், பண்பாடு என்பன சிறப்பானவை விருந்தோம்பல் பண்பில் மிகச் சிறந்தவர்கள் என்பதை நான் அனுபவத்தில் நேரடியாகக் கண்டுள்ளேன் அவர்களின் விருந்தோம்பலினால் நான் வியப்படைகிறேன்.

### மதமாற்றம் பற்றி......

கே: தமிழகத்தில் இராமநாதபுர மாவட்டத்தில் ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட இந்துக்கள் முஸ்லிம்களாக மாறியுள்ளனரே இதற்கு காரணம் என்ன?

சோ: மதமாற்றம் செய்யப்படுவது பொதுவாக விரும்பத்தக்கதல்ல. அவர்கள் ஏன் மதம் மாறினார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும். இந்து சமயத்தில் சாதிக்குறைபாடுகள் தீண்டாமை, அடக்குமுறை போன்ற கொடிய முறைகள் காணப்படுவதைக் காணலாம். ஆனால் இவை வேத, இதிகாச சாஸ்திரங்களில் இல்லை. எனவே இவை இந்து சமயத்திற்குப் புறம்பானவை. இது இந்து சமயத்தில் குற்றமல்ல என்பதை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டும். மதமாற்றத்திலும் இந்த மக்கள் சமூக ரீதியாக எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவோ விடிவு காணவோ முடியாத இக் குறைகளை உணர்ந்து சமயப் பெரியார்கள் நடக்கவேண்டும். மீனாட்சிபுர சம்பவம் எந்த அடிப்படையில் ஏற்பட்டதென ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய அரசாங்கம் பணித்துள்ளது இதை முஸ்லிம் பெரியார்கள் கூட இதைத் தீர்க்க நல்லதல்லவென கண்டித்துள்ளனர்.

### சிறந்த நடிகர்

கே: தமிழகத்திலுள்ள சிறந்த நடிகர் யாரென்று கூறுவீர்களா?

சோ:- நடிப்புத்துறையிலே சிவாஜி கணேசன் சிறந்த நடிகர் என்று கூறவேண்டும். புதிய தலைமுறையினரைப் பொறுத்தவரையில் கமலஹாசன், ரஜினிகாந்த் ஆகியோர் செல்வாக்கு பெற்றிருக்கின்றனர்.

### கதைகள் படிப்பதில்லை

கேள்வி: ஜானகிராமன், ஜெயகாந்தன் ஆகியோர்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

சோ: நான் இளவயதிலிருந்தே கதை வாசிப்பதில்லை. எனவே அவர்களைப்பற்றி என்னுல் சொல்லமுடியாது.

கேள்வி: இலங்கைத் தமிழரின் அரசியல்நிலைபற்றி தாங்கள் நன்கறிவீர்கள். இலங்கைத் தமிழரின் நிலைபற்றி தங்கள் நாட்டு அரசாங்கத்திற்கு எதேனும் கூறுவீர்களா? தாங்கள் இலங்கைத் தமிழருக்கு கூறும் அரசியல் ஆலோசனை யாது?

சோ: நான் அரசியல் பற்றி ஏதும் கூற விரும்பவில்லை.

### எம். ஜி. ஆருடன் தகராறு?

கேள்வி: எம் ஜி ஆருக்கும் உங்களுக்கும் ஏன் தகராறு?

சோ: நானும் எம் ஜி ஆரும் நேருக்குநேர் சந்திக்கும்போது நன்கு பேசிக்கொள்ளுகின்றோம். ஒரு தகராறும் இல்லை. நீங்கள் எனக்கும் அவருக்கும் தகராறைக் கிளப்பிவிடாதீர்கள்.

கேள்வி: கவிஞர் கண்ணதாசன் பற்றித் தங்கள் கருத்து?

சோ: ஒருமுறை பாரதியாருக்கு அடுத்த கவிஞர் அவர்தான் என்று நான் எழுதியபோது பல கவிஞர்கள் என்னுடன் சண்டை பிடித்தார்கள், அவரது கவிதையில் பாமரமக்களுக்கு விளங்கக்கூடியவகையில் எளிமையாக எழுதுகிறார். அவரது உரைநடை சாதாரணமாக இருக்கிறது. அதைக் கண்டு நானே பொறுமைப்பட்டதும் உண்டு.

### சாயிபாபா-குருமகராஜ் ..

கேள்வி: இந்தியாவில் சாயிபாபா, குருமகராஜி என்பவர்கள் தோன்றியுள்ளார்களே. இவர்கள் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

சோ: யேசுக்கிறிஸ்துநாதர், பரமஹம்சர் வழியில் செல்பவர்கள் அவர்களை நம்பிச் செல்கிறார்கள். ஆதலால் இவர்களைப் போன்ற மனிதர்களை நம்புவதால் மனிதன் கெட்டுப் போகவில்லை.

## "ஆலயங்களுக்கு உயிர்த்தானம் உடன் நிறுத்தப்பட வேண்டும்',

பாதுகாப்புசபை கோரிக்கை

(நமது நிருபர்)

"யாழ். மாவட்டத்தில் ஆங்காங்கே செறிந்திருக்கும் இந்து ஆலயங்களுக்கு ஆடுகள், கோழிகள், பசுக்கள், போன்ற வற்றைப் பக்தர்கள் காணிக்கையாக வழங்குவதையும்-அவற்றைக் கசாப்புக் கடைக்காரர் ஏலத்தில் வாங்கிச் செல்வதையும் ஆலயபரிபாலன சபையினரும் ஆலய தர்மகர்த்தாக்களும் உடனே நிறுத்த வேண்டும்."

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானத்தை, பசுபாதுகாப்புச் சபை, அண்மையில் வேலணை கிழக்கு முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

இக் கூட்டத்திற்கு கல்விமானும் சமயத்தொண்டருமான திரு. இ சபாலிங்கம் தலைமைதாங்கினார். அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது.

"இந்துக்கள் பசுவின் புனிதத்தன்மையை நேசிக்கும்போது, நாம் இறைவனுக்குத் தானமாக வழங்கும் பசு, கசாப்புக் கடைக்காரர்களால் கொள்முதல் செய்யப்பட்டுக் கொல்லப்படுவதைச் சிந்திக்க மறுக்கின்றனர். சைவர்கள் பூசுவது திருவெண்ணீறு திருவெண்ணீறு, எமக்குக்கிடைப்பது பசுவிலிருந்தான், இப்படிப்பட்ட பசுவைக் கொல்வது நியாயமா எனச் சிந்திக்க வேண்டும் திருஞானசம்பந்தர் கூட, பசுவின் தன்மையை எவ்வளவு அழகாக, அரும்பதத்தில் பாடியுள்ளார் எனவே, பசுக்கள் தானமாக வழங்கப்பட்டுக் கொல்லப்படுவதை உடன் நிறுத்த வேண்டும்" மென்றார்.

கூட்டத்தில் உரையாற்றிய திரு. க. வ செல்லப்பா சுவாமிகள்" எமது இயக்கத்தின் கோரிக்கையை ஏற்றுப் புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையினர். நடவடிக்கை கள் மேற்கொண்டு பசுதானத்தையும் அது கொல்லப்படுவதையும் தடுத்து நிறுத்தியமை பாராட்டுக்குரியதுஎன்றார்.

மற்றும், திருவாளர்கள் ச. செல்வகுமாரசாமி, க சிற்றம்பலம், மு. மயில்வாகனம் உட்படப்பலர் உரையாற்றினர். (க)

## "பொறுமை வெற்றியின் அறிகுறி"

(அரியாலை)

பொறுமை பலவீனத்தின் அறிகுறியல்ல. வெற்றியின் அறிகுறியாகும். வருகைக்காக காத்திருக்கும் மக்களாகிய நாம் இறைவனின் வழி நடத்தல் வரும் வரை மிகவும் பொறுமையுடன் இருக்கவேண்டும்

இவ்வாறு சன்னிதம் இறிக்க சேவா ஆச்சிரமத்தின் 42வது வருடாந்த விழாவையொட்டி ஆலயத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையின் அருள் திரு பே. சர்வானந்தம் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். (க)

# அமைச்சர் 'இராசு'

## அக்டோபரில் யாழ். விஜயம்

[மட்டக்களப்பு]

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை எதிர்வரும் அக்டோபர் மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொள்வாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் இராசதுரை அமைச்சர் பதவி ஏற்று இரு வருடங்களின் பின்பு முதற் தடவையாக மேற்கொள்ளும் விஜயம் இதுவாக அமைகின்றது.

அமைச்சர் யாழ். நகரில் நாவலர் மணி மண்டபத்திற்கான அத்திவாரக்கல்லை நாட்டி வைப்பதோடு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் தண்ணீர்ப் பிரச்சினையால் கஷ்டப்படும் கிராமங்களில் ஆழக் கிணறுகள் தோண்டும் வேலைகளையும் ஆரம்பித்துவைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. [அ]

---

## "மருத்துவர்கள் முன்னேற கூட்டுறவு அவசியம்"

[யாழ்ப்பாணம்]

மருத்துவர்களாகிய நீங்கள் முன்னேற கூட்டுறவாக ஒன்றுபட்டு ஒருமித்த நோக்குடன் செயல்படவேண்டும் என்று சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் சம்மேளனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலின்போது யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா கூறினர்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஆறு வைத்தியர்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

டாக்டர் எஸ். பி. ஈ. இன்னாசித்தம்பி தலைமையில் யாழ் மாவட்ட செயலகத்தில் இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திரு. எஸ். நடராசா தொடர்ந்து கூறியதாவது:

"எதற்கும் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கக் கூடாது. கூட்டுறவாக ஒரு இயக்கத்தை உருவாக்கி குறிப்பாக 1000 பேர் 100 ரூபாவீதம் சேமித்து ஒரு பாரிய ஸ்தாபனத்தை தொடங்கவேண்டும். இதனால் அதிக வருவாயையும் ஈட்டலாம்.

"இந்தியாவைப் போல் பெரிய ஒளஷத ஆலயம் ஒன்றை நாம் இங்கு நிறுவவேண்டும். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாவட்ட அபிவிருத்திசபை மூலம் எடுப்பேன்" என்றார்.

மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினரும், சித்த ஆயுள்வேத வைத்தியருமான திரு. நடராசாவும் பேசினர். [மா-க]

---

## ஜப்பானில் புயலுக்கு 18 பேர் பலி

டோக்கியோ, ஆக. 24

ஜப்பானில் வீசிய புயல்காற்றுக்கு 18 பேர் பலியானர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புயல்காற்று ஜப்பானின் மத்திய பகுதியிலும், வடபகுதியிலும் வீசியுள்ளது.

இதனால் 24 பேர் காணமல் போய்விட்டதாகவும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்புயல்காற்றினால் 20,000 பேர் வீடுவாசல்களை இழந்துள்ளதாகவும், 1,000க்கும் அதிகமான ஏக்கர் காணிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

---

## "வலுவிழந்தோரும் நிறைவுடன் வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும்"

[மட்டுவில்]

"ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்படும் உரித்தான உரிமைதான் நீதி. இந்த நீதியின் அடிப்படையில் வாழும் மனிதன் ஒவ்வொருவரும் சமுகத்திற்கு நீதி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் அங்கவீனர், வலுவிழந்தோர் ஆகிய அனைவரையும் மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாகக் கொண்டு அவர்களின் நலனை, சந்தோஷத்தை, வாழ்வில் நிறைவைப் பெற ஒவ்வொரு மனிதனும் உதவ, உழைக்க கடமைப்பட்டுள்ளோம்."

இவ்வாறு திருச்சபை யாழ். மாவட்ட அத்தியட்சகர் அதி வண. பிஷப் டி. ஜே. அம்பலவாணர் கைதடி நவீல்ட் விழிப்புலன் செவிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வெள்ளிவிழா பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது கூறினர்.

கொழும்பு மாவட்ட அத்தியட்சகரும் ஆளுநர்சபைத் தலைவருமான அதி வண. சுவிதின் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. கு. நேசையா, மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எஸ். நடராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அதி வண. பிஷப் அம்பலவாணர் தொடர்ந்து கூறியதாவது:

"பலம் குறைந்தவர்களாலும் பலன் உண்டு என்பதை நாம் சிந்திக்கவேண்டும். ஆகவே பலம் குறைந்தவர்களின் பலனையும் இந்த உலகு பெறவேண்டும் என்ற நல்லெண்ண அடிப்படையில் அன்பு வழியில் அவர்கள் ஆற்றலை நாம் வளர்க்க வேண்டும்.

தலைவர் அதிவண. சுவிதின் பெர்னாண்டோ பேசுகையில் வலுவிழந்தோர்களுக்கும் நாம் சகல துறையிலும் அன்பு செலுத்தி, வலுவிழந்தோரையும் நிறைவுடன் வாழ வழிவகுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். [க]

---

## ஒரு உயிரைக் காப்பாற்றுங்கள்!

[புலோலி]

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அவசர சத்திர சிகிச்சையை எதிர்நோக்கியிருக்கும் ஏழைப் பெண்ணுக்கு 'ஏ' குரூப் இரத்தம் அவசியமாகத் தேவைப்படுகிறது. இரத்த தானம் செய்ய விரும்புவோர் உடனடியாக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். [க]

---

## இடமாற்றம் பெறுவதில் தீவிர சிரத்தை

[மட்டக்களப்பு]

அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளியேறி தற்போது மீண்டும் கடமைக்குச் சென்று வரும் திணைக்கள ஊழியர்கள் தற்போது கல்முனை, மட்டக்களப்புப் போன்ற தமிழ்ப் பகுதிகளுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதில் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

அம்பாறை கச்சேரி, மின்சாரசபை, கல்வி இலாகா, நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கைபோக்குவரத்துச்சபை உட்படப் பல திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்கள் தான் இடமாற்றம் பெறுவதில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் நீண்டகால சேவை புரிந்தவர்கள் இடமாற்றம் கிடைக்காத பட்சத்தில் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள் [அ]

---

## கருடன்விடுதூது பிரபந்தம் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

வல்லிபுரத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆழ்வார் சுவாமிமீது, தென்புலோலியூர் கு. பெரியதம்பி பாடிய கருடன்விடு தூது என்னும் நூல் வெளியீட்டுவிழா, வல்லிபுரம் குருக்கட்டுச் சித்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பூர்த்தி விழாவான நாளை புதன், அவ்வாலய முன்றலில் உயர்திரு. க. வேலும்மயிலும் ஆசிரியர் தலைமையின்கீழ் வெளியிடப்படும். கவிஞர் முருகவே. பரமநாதன் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். [இ]

---

## வெளிநாடு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

எங்கள் மத்தியில் ஏற்படும் சிறு சிறு பிணக்குகளை நாம் நல்லிணக்கசபை மூலமாகத் தீர்த்துக்கொள்வோம். எங்களை நாம் இழிவுபடுத்தி அழிப்பதைவிட்டு ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடுவோம். அண்மையில் கம்பர் மகனில் எழுதுமட்டுவாளில் ஏற்பட்ட சம்பவங்களை எல்லாம் நானே பத்திரிகை வாயிலாக அறிந்தேன். உண்மையில் வெட்கப்படவேண்டும். குறுகிய மனப்பான்மையுடன் சாதி, சமயம் பேசி சச்சரவு செய்ய இதுவல்ல தருணம். இவற்றுக்கு நாம் சாவுமணி அடிக்கவேண்டும்."

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. என். செந்தில்வடிவேல் பேசுகையில் கூறியதாவது:

வரலாற்றில் இடம்பெறக்கூடிய ஒரு சம்பவம் நல்லிணக்கசபை ஏற்படுத்துதல். உழைக்கும் பணத்தில் ஒரு தொகைப் பணம் வழக்காறிஞர்களுக்கு செலவாவதை நாம் இனிமேலும் அனுமதிக்கக்கூடாது. எம்மை நாம் சமாதானமானவர்களாகவும் ஒற்றுமையுள்ளவர்களாகவும் வாழ வைக்கவேண்டும்.

எமது பகுதியிலுள்ள பண்ணாகம் கிராமம் யாவற்றுக்கும் ஒரு முன்மாதிரியான கிராமமாக விளங்கவேண்டும். நல்ல காரியங்கள் செய்யும்போது உதவியும் ஒத்துழைப்பும் நாம் வழங்குவோம். இந்த நல்லிணக்கசபையினர் வழங்கும் தீர்ப்பை நாம் ஏற்று நடவடிக்கை எடுப்போம்."

---

## இப்படியும் நடக்கிறது

மேற்கு ஜெர்மனியிலிருந்து ஒரு தொகை இளைஞர்கள் ஜெர்மனி பத்திரிகையாளருடன் அண்மையில் தாயகம் திரும்பியிருந்தார்கள் அல்லவா? இவர்கள் பற்றி இப்படியும் ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது.

ஜெர்மனிக்குள் அடி எடுத்து வைத்ததும் அவர்களிடம் ஒரு படிவம் (Form) வழங்கப்பட்டதாம். உரியமுறையில் பெயர் விலாசத்தை எழுதி கையெழுத்தும் வைத்துக் கொடுத்ததும்; உடனடியாக அத்தனை பேரும் மூட்டை கட்டப்பட்டனராம்.

காதோடு ஒரு செய்தி:

அந்தப் படிவம் ஜெர்மனிய மொழியில் தான் அச்சிடப்பட்டிருந்தது. படிவத்தில் கேட்கப்பட்டிருந்த முக்கிய கேள்வி—

"காலநிலை உட்பட பல அசௌகரியங்கள் காரணமாக நான் தாயகம் திரும்ப விரும்புகிறேன்" என்பதுதானும்.

இதற்கும் ஆம் என்று எழுதி கையெழுத்து வைத்து விட்டனர்!

அப்படியானல் தாயகம் புறப்பட்டுத்தானே ஆகவேண்டும்!

❖ ❖ ❖

லண்டனில் இப்பொழுது நடைபெற்று வரும் பொது நலவமைப்பு நாடுகளின் இலங்கைக் கண்காட்சியில் பெரும் மதிப்பு வாய்ந்த இரத்தினக்கல்லொன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இக்கல்லை கண்ணும் கருத்துமாக பாதுகாப்பவர் யார் தெரியுமா?

கொடிய விஷத்தைக் கொண்ட நாகபாம்பொன்றுதான்; எப்படிக் காவல்?

— ஊடுருவி

---

## சிமெந்து உற்பத்தி

[காங்கேசன்துறை]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் "சிமெந்து உற்பத்தி அதிகரிப்பு" என்ற தலைப்பில் நேற்று வெளியான "ஈழநாடு" பத்திரிகையில் இடம்பெற்ற செய்தியில், "நாளொன்றுக்கு 185 மெட்ரிக் தொன் சிமெந்து விற்பனை செய்யப்படுவதாக" வெளிவந்த தகவல்களில் தினசரி 1850 மெட்ரிக் தொன் சிமெந்து விற்பனை செய்யப்படுவதாக இருக்கவேண்டும்.

தவிர இவ்விபரத்தை விற்பனை அதிகாரி திரு. சாதுசிகாமணிப்பிள்ளை தெரிவித்ததாக வெளிவந்த செய்தியும் தவறாகும்.

---

## யாழ். நூலகத்திற்கு 2ஆயிரம் நூல்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ் பொதுசன நூலகத்திற்கு இதுவரை 2000 நூல்கள் மட்டும் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருப்பதாக யாழ். நகரமுதல்வர் திரு. இராசா விசுவநாதன் தெரிவித்தார்.

மற்றும் உதவிகள் இன்னும் வந்து சேரவில்லையென்றும், அடுத்த வாரம், நூல்நிலைய புனரமைப்புப்பற்றிய கூட்டத்தில், பலவிடயங்கள் ஆராயப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [க]

---

## விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

பொலிஸ் சார்ஜன் அன்ரன் கொலைவழக்கு செப்டம்பர் 3-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொலிசார் தவணை கேட்டதால், யாழ். நீதவான் திரு. ரி. ஜோதிநாதன் விசாரணையை செப்டம்பர் 3-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். [க]

---

## சமூகக் கொடுமை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்துக்களைப் பெரும் எண்ணிக்கையில் மதம் மாற்றுவதற்கு மத்தியகிழக்கிலிருந்து பெருந்தொகைப் பணம் வந்து சேர்வதாகக் கூறப்படுவது குறித்து இப்பொழுது புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

---

## சென்னைவாசி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் இவர் மரணமானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக உடனடி விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரகாம் கோரியுள்ளார்.

சடலத்தை சென்னைக்கு கொண்டுசெல்ல இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

---

## பார்வை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சாதனையைப் பார்க்க வந்தவர்களிடமிருந்து வசூலித்த பெருந்தொகைப் பணத்தின் அரைவாசியைப் பிரிட்டனிலுள்ள பார்வையற்றோரின் நலனுக்காக இவர்கள் வழங்கியுள்ளனர். [இ]

---

## ஐ. தே. க...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு, ஜனாதிபதி நிதியிலிருந்து நிவாரணம் அளிப்பது ஆகிய மூன்று தீர்மானங்களுமே நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களை சபை உறுப்பினர் திரு. அல்பிரட் சீவரத்தினம் கொண்டுவந்திருந்தார். பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் வழிமொழிந்தார்.

---


## ஆசார்ய அபிஷேக அழைப்பு

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் இராமலிங்க ஐயர் அவர்களது புத்திரர்கள் இ. சோமசுந்தரேஸ்வரசர்மாவுக்கும் இ. விஸ்வேஸ்வரசர்மாவுக்கும் ஆவணி 10-ம் நாள் புதன்கிழமை காலை 9-00 மணிக்கு சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள், ச. யோகீஸ்வரக்குருக்கள் ஆகியோரால் ஆசார்ய அபிஷேகம் நடாத்தி வைக்கப்படும்.

இ. விஸ்வேஸ்வரசர்மா

0731


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.